விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 16 சனிக்கிழமை (02.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

## 41 நாட்களின் பின் இயல்புக்கு திரும்பியது இலங்கை

### கோவிட் அச்சுறுத்தலின்றி மக்கள் நடமாட்டம் தாராளம்

(கொழும்பு)

41 நாட்களின் பின் நாட்டின் நிலைமை நேற்று இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

கொரோனாவின் அச்சுறுத்தலின்றிபொதுமக்களின் நடமாட்டம் வீதிகளில் தாராளமாகக் காணப்பட்டது,

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலையடுத்து 15



யாழ்.வருகிறார்

## இந்.வெளியுறவு செயலாளர்



15

நாட்டில் மேலும்

## 58 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 15

# ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து ஒத்துழைக்கும்

### தூதுக்குழு உறுதியளித்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான பலதரப்பட்ட ஈடுபாட்டை வரவேற்ற ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு, இலங்கையுடனான தொடர்ச்சியான ஒத்துழைப்பை உறுதி செய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



வவுனியாவில் உயிரிழந்த

## முதியவருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் உயிரிழந்த 62 வயது முதியவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் 15

## தென்மராட்சியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி அம்பாள்புரத்தைச் சேர்ந்த அ. சுரேஷ்குமார் (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

மிருசுவில் பகுதி 15

## சுகாதார வழிகாட்டுதல் பின்பற்றப்படுகின்றதா?

### ஆராயுமாறு கோவிட் செயலணி அனைத்து துறையினருக்கும் அறிவிப்பு

(கொழும்பு)

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், உரிய சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றனவா? என்பது தொடர்பில் அந்தந்தத்துறையினர் 15

கொரோனாவால்

## கிளிநொச்சியில் மூதாட்டி மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த 72 வயது வயோதிபப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

கொரோனாவால்

## சாவகச்சேரியில் மூதாட்டி பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் கொரோனாத் தொற்று ஏற்பட்டு வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்த மூதாட்டி ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந் 15

## நாட்டை கட்டுப்பாடின்றி திறப்பதனால் தொற்றுப் பரவல் சடுதியாக அதிகரிக்கும்

### இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

முடக்க நிலைமையை முடிவுக்கு கொண்டுவர நாட்டை கட்டுப்பாடற்ற விதத்தில் திறப்பதானது, மீண்டும் தொற்று பரவல் ஆரம்பமாக வழிவகுக்கலாம்.

தடுப்புசி வழங்கும் வீதம் அதிகமாகக் காணப்பட்டாலும், தற்போது இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையும் அதிகமாக 15

## அமைச்சரவையில் பாரிய மாற்றம்

### தயாராகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

அமைச்சரவையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தேசித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முழுமையான 15

## அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

(கொழும்பு)

"ஊரடங்குச் சட்டத்தை ஏற்கெனவே நகைச்சுவையாக்கிய அரசு, தற்போது அவசரகாலச் சட்டத்தையும் நகைச்சுவையாக்கியுள்ளது. 15

## விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூர ஒருபோதும் அனுமதியோம்

### அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை இலங்கையில் நினைவுகூர ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலில் பங்கேற்ற இரண்டு 15

# ஆவரங்காலில் ஆபத்தான கூரிய ஆயுதங்கள் மீட்பு


## சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

(அராலி)

ஆவரங்கால் மேற்குப் பகுதியில் ஆபத்தான கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டதோடு சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆவரங்கால் மேற்குப் பகுதியில் வன்முறைக் குழு ஒன்று தாக்குதலுக்கு தயாராக இருப்பதாக நேற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதியானது இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டபோது சந்தேகநபர்கள்



தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த பகுதியிலிருந்து ஆபத்தான கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம-03,104)

# அனைத்து மாகாணங்களிலும் ஒரே நாளில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்க தீர்மானம்

## செவ்வாயன்று ஆளுநர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

200 மாணவர்களுக்க உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் திகதியை நிர்ணயிக்க அனைத்து மாகாணங்களின் ஆளுநர்களும் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கலந்துரையாடவுள்ளனர்.

அதனடிப்படையிலேயே வடக்கு மாகாணத்தில் 680 ஆரம்பப் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்று மாகாண ஆளுநரின் அலுவலகம் தெரிவித்தது.

200 மாணவர்களுக்க உட்பட்ட ஆரம்ப பாடசாலைகளை ஒக்ரோபர் 18ஆம் திகதி ஆரம்பிப்பதாக ஊவா மாகாண ஆளுநரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி ஆரம்பிப்பதாக தென்மாகாண ஆளுநரும் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே அனைத்து மாகாணங்களிலும் ஒரே நாளில் ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ம-03)

# மல்லாகம் கிழக்கில் வெடிபொருள் கண்டுபிடிப்பு

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் கிழக்கு பகுதியில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் இருந்து சக்திவாய்ந்த வெடிபொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த காணியின் உரிமையாளர் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் காணியை சுத்தம் செய்தவேளை குறித்த வெடிபொருள் அவதானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழாங்கப்பட்



டது. குறித்த வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,104)

# சரத் வீரசேகர போன்ற முட்டாள்தனமான அமைச்சராலேயே நாட்டுக்கு இந்த நிலை

## சுமங்கல தேரர் காட்டம்

(கொழும்பு)

மோசடிக்காரர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ள இலங்கை அரசாங்கம் உண்மையை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை சட்டத்தை மீறி அடக்குவதாக உலப்பனே சுமங்கல தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சரத் வீரசேகர போன்ற முட்டாள்தனமான அமைச்சர்களின் செயற்பாடுகள்மற்றும் கருத்துக்கள் காரணமாகஜிஎஸ்பிபிளஸ் வரிச்சலுகையை தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளதாக உலப்பனே சுமங்கல தேரர் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சரத் வீரசேகர போன்ற முட்டாள் அமைச்சர்களைக் கொண்டு ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களை அச்சுறுத்துகின்றனர். இந்த நாட்டின் சட்டங்களை மேலும் வலுப்படுத்த வேண்டுமென சரத் வீரசேகர குறிப்பிடுகின்றார்.

இந்த நாட்டில் உள்ள சட்டங்கள் இந்த நாட்டை நிர்வகிக்கப் போதாதா? இவர்களுக்க எதிரான மக்களின் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகளை அடக்குவதற்கு புதிய சட்டத்தை இவர்கள் வேண்டுமென்கின்றனர். இந்த நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயல்கின்றனர்.

சீனி மோசடி, வெள்ளைப் பூண்டு மோசடி மாபியாக்களுக்கு எதிராக இவர்கள் எடுத்த சட்ட நடவடிக்கை என்ன? மாபியாக்காரர்களின் அருகில் சென்று மண்டியிட்டு, ஊடக நிறுவனங்களுக்குள் ஒழிந்துகொண்டு, கீழ்த்தரமான ஊடகப் பிரசாரத்தை எதிர்பார்க்கின்றனர்.

இவர்கள் மாபியாக்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையையும் எடுக்கமாட்டார்கள். இந்த விடயங்களை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்களை இன்று விசாரணைக்கு அழைக்கின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக ஏதாவது ஒரு கருத்தை வெளியிட்டால் சட்டத்தை மீறி இவர்கள் அடக்குகின்றனர். ஜிஎஸ்பிபிளஸ் வரிச்சலுகையை தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் இந்த நாட்டிற்கு வருகைதந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் சரத் வீரசேகர போன்ற முட்டாள் அமைச்சர்களின் செயற்பாடுகள் மேலும் பாதிப்பினை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

# தென்மராட்சியில் வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவில் அதிருப்தி

## அதிகாரிகள் குழு நேற்று நேரில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிபிரதேச செயலக பிரிவில் வீட்டுத் திட்டத்துக்கு தெரிவாகிய பயனாளிகள் தொடர்பில் எழுந்த அதிருப்தி நிலை தொடர்பில் அதிகாரிகள் குழு ஒன்று நேற்று எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் நேரில் ஆய்வினை மேற்கொண்டது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தென்மராட்சிபிரதேசசெயலக பிரிவில் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் முறைகேடு இடம்பெற்றதாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

அதுதொடர்பில் பிரதமரின் அலுவலகம் வரை முறைப்பாடுகள் சென்ற நிலையில் மீளாய்வு செய்யுமாறு பணிக்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரினால் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களின் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் மீளாய்வு கோரப்பட்டது. அதற்காக பிரதேச செயலக குழுவினால் மீளாய்வுப் பட்டியல் அரச அதிபருக்கு அனுப்பப்பட்டன.

மீளாய்வுப் பட்டியல் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுக்கும் வழாங்கப்பட்டன.

இந்த நிலையில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் சில அதிருப்தி நிலை காணப்பட்டதால் மாவட்ட அரச அதிபரினால் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழு நேற்று தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் எழுமாறாக சிலரிடம் சென்று ஆராய்ந்தனர்.

இந்தக் குழு விரைவில் தமக்கு விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். அதனடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம-03)

## திருத்தம்

நேற்றைய தினம் (01) பிரசுரமாகிய தியாகராசா நாகராசா என்பவரது 31ஆம் நாள் நினைவஞ்சலியில் ஆலய வழிபடுநர் என்பதற்குப் பதிலாக ஆயை வழிபடுநர் சபை என தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. இதனைத் திருத்தி வாசிக்கவும்.

ஆலய வழிபடுநர்.


## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலக விதாத வள நிலையத்தில் அலுவலக பணியாளராகக் கடமையாற்றும் **கணபதிப்பிள்ளை பரணிதரன்** அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

**பவளம் கணபதிப்பிள்ளை**

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், நல்லூர்.


# உண்மையை கூறுபவர்களை அடக்குவதே அரசின் கொள்கை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

உண்மையை கூறும் நபர்களை அடக்குவது அரசாங்கத்தின் கொள்கை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புள்ளிவிபரங்கள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான உண்மையை கூறியமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை நடத்துவதன் மூலம் அரசாங்கம் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ம-03)

# நாட்டில் நேற்று மேலும் 893 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 893 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 518,775 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 47,784 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 597 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 458,085 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

# இறக்குமதிப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட 100 வீத வைப்புத் தொகை நீக்கம்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



(கொழும்பு)

**அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட 100% வைப்புத் தொகை தேவைப்பாடு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

நுண்பொருளாதார மற்றும் நிதி அமைப்பு ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆறு மாத கால பாதைக்கான கட்டமைப்பு அறிக்கை ஒன்று நேற்று வெளியிடப்பட்டது.

அந் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறக்குமதியாளர்கள் பொறுப்புடன் செயற்படுவதுடன், தேவைக்கேற்ப மட்டுமே இறக்குமதியை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு ஒதுக்கம் 5 பில்லியன் அமெரிக்க டொலராகும் எனவும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களைக் கண்காணிப்பதற்கான ஜனாதிபதி செயலணி தமது கடமைகளைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (4-5)

# தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பரிந்துரைக்கமைய 12 வயது தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான பைஸர் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டமானது யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளாதவர்கள் 077 074 1385 என்னும் தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகொண்டு பதிவுகளை மேற் கொள்வதன் மூலம் உரிய தினத்தில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் மேலும் அவர் தெரிவித்தார். (7-5-33-18)

# போக்குவரத்து விதி மீறல்; 125,000 ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் நளினி சுதாகரன் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையைச் சேர்ந்த குறித்த நபர் நேற்றைய தினம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரினால் முற்படுத்தப்பட்டார். அவர் மீது 7 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து குற்றப்பத்திரத்தை பொலிஸார் தாக்கல் செய்தனர.குறித்த நபர் தனது குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டமையினால் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும் ஏனைய 4 குற்றங்களுக்கு 50 ஆயிரத்து 500 ரூபாயும் தண்டப்பணமாக விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (7-5-33)

# இலங்கைக்கு உலக வங்கி 500 மில்லியன் கடனுதவி

(கொழும்பு)

இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது என அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கிராமம் புறச் சாலை வலையமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய வேளாண்மை சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்த கடனுதவி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் செயற்படுத்தப்படும் அதேவேளை, இந்த திட்டத்தை கண்காணிக்க தேசிய வழிநடத்தல் குழுவொன்று அமைக்கப்படும்.

இந்த கடன் தொகையை 10 வருட சலுகைக் காலம் உட்பட 28 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5)

## அரச, தனியார் துறையின்

# சேவை நேரத்தை மாற்றியமைத்தால் புகையிரத சேவையை ஆரம்பிக்க முடியும்

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறையினர் சேவைக்கு சமூகமாகும் நேரத்தையும், சேவை நிறைவு பெறும் நேரத்தையும் மாற்றியமைத்தால் அலுவலக புகையிரத சேவையை சுமூக இடைவெளிக்கு அமைய மீள ஆரம்பிக்க முடியும்.

இவ்விடயம் தொடர்பில் பொதுத்துறை நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். என புகையிரத திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலை மற்றும் மாலை புகையிரத சேவையில் நிலவும் சன நெரிசலை கட்டுப்படுத்தும் யோசனையை முன்வைப்பதற்கும், புகையிரத பாதைகளையும் திருத்துவதற்கும், புகையிரத பெட்டிகள் கிருமி தொற்று நீக்கல் செய்யும் பணிகளுக்காகவும் புகையிரத சேவை இரண்டு வார காலத் திற்கு முடக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய புகையிரத சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலான யோசனையை இரண்டு வார காலத்திற்குள் முன் வைக்குமாறு போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது என தெரிவித்தார். (4-5)

# அரச சேவைகளை முன்னெடுப்பதற்கான சுற்று நிருபம் வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நேற்று அதிகாலையுடன் நீக்கப்பட்டது.

இதனையடுத்து, அரச சேவைகளை வழமைபோல முன்னெடுக்க தீர்மானிக்கப் பட்டது.இந்த நிலையிலேயே, இதற்கான சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய,அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான ஆளணியினரை அடையாளம் கண்டு, கடமைக்கு அழைக்கப்பட வேண்டும்

அவ்வாறு ஊழியர்களைச் சேவைக்கு அழைக்கும் அதிகாரம் நிறுவனப் பிரதானிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாகனங்களைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் ஊழியர்களுக்கு மேற்படி நியதி பொருந்தாது.

அவர்கள் வழமை போலக் கடமைக்குச் சமூகமளிக்க முடியும் இவ்வாறு கடமைகளுக்கு அழைக்கப்படும் அதிகாரிகளைத் தவிர்ந்த மற்றைய அனைவரும் ஒன்லைன் முறைமை ஊடாகக் கடமையாற்ற வேண்டும்.

கடமைகளுக்காக அலுவலகத்துக்கு அழைக்கப்படும் ஊழியர்கள் பணியில்லாத நாட்களில் ஒன்லைன் முறைமை ஊடாகக் கடமையாற்ற வேண்டும். இவ்வாறு கடமைக்கு அழைக்கப்படும் அதிகாரிகள் மற்றும் ஒன்லைன் முறைமை ஊடாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கான வசதிகள் வழங்குதல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களின்போது வேறு இடங்களில் கடமையாற்ற தற்காலிகமாக வாய்ப்பளிக்கும் அதிகாரம் அமைச்சின் செயலாளர் மற்றும் நிறுவனப் பிரதானிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், விசேட நோய் நிலைமைகளைக் கொண்டவர்கள் கடமைக்கு சமூகமளிக்க தேவையில்லை.

அவ்வாறானவர்களின் சேவை கட்டாயம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவர்கள் கடமைக்குச் சமூகமளிக்கவும்

வீடு செல்லவும் விசேட கால எல்லை மற்றும் வசதிகளை வழங்க நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5)

# ஐதராபாத்தை வீழ்த்தி வெற்றி மழையில் சென்னை



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 44 ஆவது லீக் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில், முதல் அணியாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பிளே ஓஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சன்ரைசஸ் ஐதராபாத் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசஸ் ஐதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக சஹா 44 ஓட்டங்களையும் அபிஷேக் சர்மா மற்றும் அப்துல் சமாட் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்னை அணியின் பந்துவீச்சில், ஹேசில்வுட் 3 விக்கெட்டுகளையும் பிராவோ 2 விக்கெட்டுகளையும் தாகூர் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 135 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் சென்னை அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ருத்துராஜ் கெய்க்வாட் 45 ஓட்டங்களையும் டு பிளெஸிஸ் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஐதராபாத் அணியின் பந்துவீச்சில், ஜேஸன் ஹோல்டர் 3 விக்கெட்டுகளையும் ரஷித்கான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 3 விக்கெட்டுகளை வீழ்த்திய ஹேசில்வுட் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# ஐ.பி.எல். தொடரிலிருந்து கிறிஸ் கெய்ல் விலகல்



2021 இந்தியன் பிரீமியர் லீக் தொடரிலிருந்து விலகுவதாக கரீபியன் புயல் கிறிஸ் கெய்ல் திடீரென அறிவித்துள்ளார்.

பஞ்சாப் கிங்ஸ் அணியும் இந்தத் தகவலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை உறுதிபடுத்தியுள்ளது.

எதிர்வரும் இருபது-20 உலகக் கிண்ணத் தொடருக்காக மேற்கிந்தியத்தீவுகள் அணியில் ஆட தன்னை புத்துணர்வாக வைத்துக் கொள்ள ஐ.பிஎல். பயோபபுள் சூழலிலிருந்து விடுபடுவதாக கிறிஸ் கெய்ல் அறிவித்துள்ளார்.

இருபது-20 உலகக் கிண்ணத்துக்காக மேற்கிந்திய தீவுகள் அணியுடன் இணையும் வரை அவர் டுபாயில் தங்கியிருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4-6)

## இன்றைய போட்டி IPL

| | | |
|---|---|---|
| MI | vs | DC |
| CSK | vs | RR |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2418

**அத்வைதா**




**கிரிசாந்**




**நிரோஜா**




**தனாதிபன்**




**கனிவிழி**




**டருஜன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

02.10.2021
புரட்டாதி 16, சனிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 8.48 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 2.16 மணிவரை
சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகு காலம் -9.02-10.32 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தராடம்
ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்** – தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**மிதுனம்** – உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** – தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு, சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** – திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**துலாம்** – ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** – எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**தனுசு** – பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மகரம்** – உறவினர்களும்,நண்பர்களும் வலியவந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** – உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** – வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

யாரையும் எளிதாக நம்பாதே! யாரையும் எளிதாகச் சந்தேகப்படாதே.

# பிரேசிலுடனான இருதரப்பு உறவுகள் வலுப்படுத்தப்படும் -பீரிஸ்

(கொழும்பு)

**இருதரப்பு நலன்கள் சார்ந்த பல்வேறு பகுதிகளில் பிரேசிலுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக இலங்கை வலுவான உறுதிப்பாட்டுடன் இருப்பதாக வெளி நாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



இலங்கைக்கான பிரேசில் தூதுவர் செர்ஜியோ லூயிஸ் கேன்ஸ்ட் மற்றும் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையில் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்து வரும் பிரேசிலிய சந்தையில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களுக்கான அதிகரித்த அணுகலை நாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் நீண்டகால அணிசேரா பாரம்பரியத்தின் பின்னணியில் பிரேசில் மற்றும் முழுமையான தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கப் பிராந்தியத்துடன் வலுவான உறவுகளைப் புதுப்பிக்கவும் அமைச்சர் தனது ஆர்வத்தைத் தெரிவித்தார். (4-5)

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)-

நாட்டில் நிலவும் கொவிட் 19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் 01.04.2021 முதல் 30.09.2021வரையான காலத்தில்காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களும்காலாவதியாகும் திகதியிலிருந்து மேலும் 12 மாதங்களுக்கு 29.09.2021 ஆம் திகதிய 17/2247 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதே போல்குறித்த வர்த்தமானி மூலம் 2021.10.01 இலிருந்து 2022.03.31 வரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகின்ற சாரதி அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் காலாவதியாகின்ற குறித்த திகதியிலிருந்துமேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கால எல்லைக்குள் உள்ளடங்காதவர்களுக்கான சேவைகள் பற்றிய விபரம் மற்றும் புதிய விண்ணப்பங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை, பிரயோகப் பரீட்சை என்பவற்றுக்கான திகதிகள் அரசின் புதிய சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமையவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிப்படுத்தலுக்கு அமையவும் அறியத்தரப்படும் என யாழ் அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் - 021 222 3789 அல்லது 021 222 7552 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5-18)


## INVITATION FOR BID
## NALLUR PRADESHIYA SABHA, KOKUVIL

The Chairman, Procurement Committee on behalf of the NallurPradeshiya Sabha, Kokuvil, invites sealed bids from eligible and qualified bidders for the Hiring of followingVehicle.

| S.No | Bid No | Name of Item/ Work | Security cash Deposit& Validity Period | Non-Refundable Fees |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41(10)/Acct/ Proc/VehideHiring - 2021 | Hiring of Vehicle (01 Nos) | Rs. 10,000.00 Validity period 30 days from 15.10.2021 | Rs. 1,000.00 |

1. Interested bidders may obtain further information from NallurPradeshiyaSabha, 14/5 Karuvapulam Road, Kokuvil (T.P No:021 222 2700) and inspect the bidding documents at the same place on any working days from 02.10.2021 until 14.10.2021 from 09:00 hrs to 15:00 hrs.

2. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, NallurPradeshiyaSabha, 14/5, Karuvapulam Road, Kokuvil from02.10.2021 until 14.10.2021 from 09:00 hrs to 15:00 hrs on working days upon payment of non-refundable fees of Rs. 1,000.00 and refundable security deposit Rs. 10,000.00. The method of payment should be by cash.

3. Bid shall be delivered or sent by hand or registered post to the Chairman, Nallur Pradeshiya Sabha, 14/5, Karuvapulam Road, Kokuvil **on or before 10.00 hrs on 15.10.2021**. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

4. All bids must be accompanied by a bid security and the validity period of Bid security is given in table above.

Chairman,
Procurement Committee,
Nallur Pradeshiya Sabha.

(C-2725) 02.10.2021

# தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிடம் விடுதலை பெற்றுத் தருமாறு கோரிக்கை

## திருச்சி சிறப்பு முகாம் கைதிகள்

(திருச்சி)

திருச்சி சிறப்பு முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளினால் விடுதலை பெற்றுத் தரக்கோரி வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு நேற்றைய தினம் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் கூறியிருப்பதாவது,

திருச்சி சிறப்பு முகாமில் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நாங்கள் ஒன்பது பேரும், இலங்கையில் இருந்து கடவுச்சீட்டு மூலம் சுற்றுலா நுழைவுச்சீட்டு பெற்று சட்ட ரீதியாக இந்தியாவிற்கு வந்தவர்கள்.

நாங்கள் நுழைவுச்சீட்டு கால எல்லை முடிந்தமை மற்றும் வாழ் வாதாரம் காரணமாக இந்தியக் கடவுச் சீட்டுப் பெற முயற்சி செய்த குற்றத்திற்காக, கைது செய்யப்பட்டு இரண்டு வருட ங்களுக்கு மேலாகத் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளோம்.

கடந்த 27 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவொன்றை பிறப்பித்துள்ளதாக ஊடகங்கள்ஊடாக அறிந்தோம். அதில், குற்றவழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் உள்ளவர்களை தண்டணைக்காலம் முடிவடைந்த பிறகு, உடனடியாக அவர்களை சொந்த நாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து, எம்மை எமது நாட்டுக்கு வருவதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அல்லது பொதுமன்னிப்பு அடிப்படையில் எங்களை விடுதலை செய்து எமது நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யுங்கள் எனத் தாழ்மையுடன் உங்களை வேண்டி நிற்கின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது. (7-5-285)

## சாவ.ஆதார வைத்தியசாலையில்

# பைசர் தடுப்பூசி ஏற்றல் நேற்று முதல் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரையான ஒரு வாரக் காலப் பகுதிக்குள் 12 தொடக்கம் 19 வரையான வயதுப் பிரிவில் உள்ள விசேட தேவை உடையவர்களுக்கு பைசர் தடுப்புசிகள் வழங்கப்படவுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் திருமதிடயாழினி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் குழந்தை வைத்திய விடுதியில் காலை 9 மணிக்கு தடுப்புசி செலுத்தும் இடத்திற்கு வருகை தருவோர் உரிய சுகாதார நடை முறைகளைப் பின்பற்றுவதுடன், மாற்றுத் திறனாளிகள்/ தீராத நோய்த் தாக்கம் உடைய பிள்ளைகள் என்பதற்கான மருத்துவச் சான்றிதழுடன், பெற்றோர்/ பாதுகாவலர் தமது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. (7-5-30)

# பதுக்கி வைக்கப்பட்ட மஞ்சள் மூடைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவில் வீடொன்றில் 20 மஞ்சள் மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படைத் தெரிவித்துள்ளது.

அதனை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கைது நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது என்று கடற்படை குறிப்பிட்டது.

நாவற்குழி மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களைச்சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சள் மூடைகள் வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மருதங்கேணி தாளையடி பகுதியில் , கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்பட்ட மஞ்சளை இருவர் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இருந்த போது ,மருதங்கேணி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மஞ்சளை ஏற்றிக்கொண்டு இருந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

அதன் போது 372 கிலோ மஞ்சள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. (7-5-18-33)



எள்ளம் குளம், பருத்தித்துறை மற்றும் கற்ககுளம் இராணுவத்தினர் ஒன்று சேர்ந்து பருத்தித்துறை சந்தை மற்றும் நகர்ப்புறம், மந்திகைச் சந்தை மற்றும் நகர்புறம், நெல்லியடி பஸ் நிலையம் சந்தைப் பகுதிகளில் சுகாதார நடைமுறைப்படி மருந்து தெளிக்கும் நடவடிக்கையில் நேற்றைய தினம் ஈடுபட்டிருந்தனர்.

(படம்:-மகாலிங்கம்)

# குரங்குகளை கட்டுப்படுத்துவதற்கு அபிவிருத்தி நிதியைப் பயன்படுத்துக

## விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

அடுத்த நிதியாண்டில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒதுக்கப்படவுள்ள அபிவிருத்தி ஒதுக்க நிதியில் இருந்து குரங்கினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தென்மராட்சி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் குரங்குத் தொல்லை காரணமாக விவசாய நடவடிக்கைகளை கைவிட்டு வருகின்றோம்.

தென்மராட்சியில் விவசாய உற்பத்திகளை மாத்திரமன்றி வீடுகள், உடைமைகள் உள்ளிட்ட பலவற்றுக்கும் குரங்குகள் சேதம் விளைவித்து வருகின்றன.

சில இடங்களில் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகவும் காணப்படுகின்றன.

குரங்கினைக் கட்டுப்படுத்த கமநலத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் முயற்சிகள் எடுத்தும் இன்று வரை எவையும் பெரிதளவில் வெற்றியளிக்கவில்லை.

இதனால் பழப் பயிர்கள் மற்றும் விவசாயத்திற்கு பெயர் பெற்ற தென்மராட்சிப் பிரதேசம் இன்று தனது உற்பத்திப் பொருட்களை குரங்குகளிடம் இருந்து காப்பாற்ற முடியாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் தற்போது அரசாங்கத்தால் ஒவ்வொரு கிராமத்திற்கும் முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட இருப்பதாகவும், அதற்கான முன்மொழிவுகளை மக்களிடம் பெற்று நடைமுறைப் படுத்த இருப்பதாகவும் அறிகிறோம்.

குறிப்பாக குறித்த திட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கென மூன்று இலட்சம் ரூபாய் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. தென்மராட்சியில் உள்ள அறுபது கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் தலா மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டை குரங்குக் கட்டுப்பாட்டிற்கு ஒதுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும்.

"அல்ரா சொனிக்" எனும் கருவி குரங்கினைக் கட்டுப்படுத்த உதவியாக இருப்பதாக கூறப்படுகிறது.

தென்மராட்சியில் அல்லாரை விவசாயப் பண்ணை மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் குறித்த கருவி பொருத்தப்பட்டு குரங்கின் வருகையைக் கட்டுப்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரிய துறை சார் நிபுணர்களுடன் கலந்துரையாடி குறித்த ஒதுக்கீட்டில் அல்ரா சொனிக் கருவிகளை கிராமம் தோறும் பொருத்தி குரங்கினைக் கட்டுப்படுத்தி தென்மராட்சி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்ய வேண்டும் என மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (7-5-30)

# அரங்க கதையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இய க்கம் வாராந்தம் நடத்தும் இணைய வழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 24 நிகழ்வு நாளை இரவு 7 மணிக்கு புத்தா க்க அரங்க இயக்க த்தின் பணிப் பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இணையவழி அர ங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647 3348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (7-5)



கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களுக்காகவும் கொரோனாத் தொற்றாளர்களைப் பாதுகாப்பாகவும் மற்றும் வைத்திய சாலையில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் நோய் தொற்று இல்லாமல் இருக்க வேண்டியும் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையத்தின் ஏற்பாட்டில் இந்து-பௌத்த இறை ஆசி வேண்டி சிறப்பு பூஜை வழிபாடு நேற்று யாழ். நாகவிகாரை சர்வதேச பௌத்த மத்தியஸ்தான நிலையத்தில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

## ‘1904’ மூலம் 150,000 பேர் பயன்

(கொழும்பு)

கொவிட் 19 நோயத் தொடர்பான ஒன்றிணைந்த சேவை பொறிமுறைக்குரிய 1904 என்ற தொலைபேசி சேவைக்கு இதுவரை சுமார் 32 ஆயிரம் குறுந்தகவல்கள் கிடைத்துள்ளன.

இதன் மூலம் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு உதவ முடிந்திருப்பதாக இந்த நிறுவனத்திற்கு பொறுப்பான பேராசிரியர் அதுல சுமதிபால தெரிவித்துள்ளார்.

இவர்களில் அவசரச் சிகிச்சை தேவைப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 1000 ஆகும். இந்த கொவிட் ஒன்றிணைந்த சேவை 24 மணி நேரமும் செயற்படுவதாக பேராசிரியர் அதுல சுமதிபால குறிப்பிட்டார். (4-5)

## விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி உள்ளிட்ட சீயோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 63 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (4-5)

# கொள்ளையடிப்பவர்களுக்கு சுதந்திரம்

# உண்மை சொல்பவர்களுக்கு விசாரணை

## இதுவே ராஜபக்ஷ அரசு

## எதிர்க்கட்சி காட்டம்



(கொழும்பு)

**நாட்டு மக்களுக்கு உண்மைகளை அம்பலப்படுத்தும் எதிர்க்கட்சியினர் மற்றும் ஊடகவியலாளர்களை அடக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களைப் பயன்படுத்துவதாகவும் கொள்ளை மற்றும் ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்கின்ற அதேவேளை, அரச நிறுவனங்கள் அரசியல்மயமாகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபையின் தரவுகள் காணாமல்போன விடயம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக உறுப்பினர் மனுஷ நாணயக்கார நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாங்கள் திருடர்களை வெளிப்படுத்தும் போது எங்களை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கின்றனர்.

வெள்ளைப்பூண்டு மாபியாவை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களை வேட்டையாடுகிறார்கள். எனினும் இந்த திருட்டில் ஈடுபடுபவர்களுக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. அதுதான் இன்று இடம்பெறுகின்றது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்களையும் பயன்படுத்தி, அரச அதிகாரிகளையும் பயன்படுத்தி உண்மை வெளிப்படுத்தப்படுவது தடுக்கப்படுகிறது. இதுவொரு அடக்குமுறை.

பாராளுமன்றத்தில் கருத்து வெளியிடும்போது அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்ற நிலையில், வெளியில் ஒரு வார்த்தையை வெளியிட்டால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கின்றனர்.

விமர்சிக்கும் ஊடகவியலாளர்களை அடக்குவதற்கு இந்த அரசாங்கம் அரச இயந்திரங்களை பயன்படுத்துகின்றது என மேலும் தெரிவித்தார். (4-5)

## கல்முனையில் நான்கு கால்களுடன் அதிசய கோழிக்குஞ்சு



(கல்முனை)

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி பிரதேசத்தின் கடற்கரைப்பள்ளி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நான்கு கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

வீட்டு உரிமையாளரால் நாட்டுக் கோழி வளர்ப்பதற்காக அடைகாக்க வைக்கப்பட்ட முட்டைகளிலிருந்து ஏழு கோழிக்குஞ்சு பிறந்துள்ள நிலையில் அதில் ஒன்றே இவ்வாறு பிறந்துள்ளது. இதனை காணும் சிறுவர்கள் சிறுவர் தினமான நேற்று தங்களுக்கான சிறுவர் தின பரிசாக நினைத்து மகிழ்ச்சியடைந்துள்ளனர். (4-5)

## தவிசாளர் பதவியை துறப்பேன் கட்சிக்குள் முரண்படும் பொன்சேகா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பல தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமன தெரிவினையடுத்து அக்கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பல தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனத்தை அந்த கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச வழங்கியுள்ளார்.

இந்த அமைப்பாளர்கள் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்திக்குள் மோதலான நிலைமை ஏற்பட்டதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு காரணம் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் சரத் பொன்சேகா எனக் கூறப்படுகிறது. பாணந்துறை தொகுதிக்கான அமைப்பாளர் நியமிக்கப்படுவதில் இந்த மோதலான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த தொகுதியின் அமைப்பாளர் பதவியைத் தனக்கு நெருக்கமான நபருக்கு வழங்குமாறு பொன்சேகா அழுத்தம் கொடுத்துள்ளார்.

அப்படி தனக்கு நெருக்கமான நபருக்கு தொகுதி அமைப்பாளர் பதவி வழங்கப்படவில்லை என்றால், கட்சியின் தவிசாளர் பதவியால் பயனில்லை என கூறியுள்ள பொன்சேகா, தவிசாளர் பதவியில் இருந்தும் விலகபோவதாகவும் எச்சரித்துள்ளார். (4-5)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber: 076 636 3378

E.mail:

valampurii@yahoo.com

# தென்கொரியாவுடன் இணங்கிப் போகத் தயார்

# அமெரிக்காவுடனான நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## வடகொரிய அரசு அதிரடி அறிவிப்பு

(சியோல்)

**அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளும், தென் கொரியாவுடன் அமெரிக்காவின் கூட்டு போர்ப் பயிற்சியும் தங்கள் நாட்டுக்கு விரோதமான போக்கு என்று வடகொரியா நம்புகிற போதிலும் தென் கொரியாவுடன் இணங்கிச்செயற்படத் தயார் எனவும் வடகொரியா அறிவித்துள்ளது.**



தென் கொரியாவுடன் இணக்கமான உறவை மீண்டும் ஏற்படுத்த வடகொரியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி வடகொரிய ஒருங்கிணைப்பு அமைச்சகம் கூறுகையில்,

'தென் கொரியாவுடன் மீண்டும் நேரடித் தொலைபேசிச் சேவையை (ஹாட்லைன்) மீட்டமைக்கவும் நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும் தயார் என நாட்டின் தலைவர் அறிவுறுத்தி இருப்பதால் மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' எனத் தெரிவித்தது.

அண்டை நாடான தென் கொரியாவுடன் மீண்டும் இணக்கமான உறவைப் பராமரிக்க விரும்பினாலும் அமெரிக்காவுடனான வடகொரியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை எனவும் வடகொரியா மீதான பகைமை உணர்வு, இராணுவ அச்சுறுத்தல்கள் மாறாத வரையில் தங்களது நிலைப்பாட்டில் மாற்றம் கிடையாது என்றும் கூறுகிறது.

மேலும் வடகொரியாவில் கிம் ஜாங் அன் குடும்ப ஆட்சி தான் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது ஆட்சிக்கு தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள கிம் ஜாங் அன்னின் இளைய சகோதரி கிம் யோ ஜாங் (வயது 34), எந்தப் பொறுப்பிலும் இல்லாமல் செல்வாக்கு பெற்று வந்தார்.

தற்போது இவருக்கு வடகொரியா அரசில் மிக முக்கியமான முடிவு எடுக்கும் அமைப்பான தேச விவகாரங்கள் கமிஷனில் (எஸ்.ஏ.சி.) உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதை அந்த நாட்டின் அரசு ஊடகமான கே.சி.என்.ஏ. அதிகார பூர்வமாக தெரிவித்துள்ளது. (7-5)

# தேர்தல் பிரச்சாரத்தில் கூடுதல் செலவு; பிரான்ஸ் முன்னாள் அதிபருக்குச் சிறை

(பாரிஸ்)



தேர்தல் பிரசாரத்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட, இரு மடங்கு கூடுதலாக செலவு செய்த புகாரில், பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிகோலஸ் சர்கோஸிக்கு ஓராண்டு வீட்டுச்சிறை விதிக்கப்பட்டுள்ளது.

இவர், 2007ஆம் ஆண்டு, தன் தேர்தல் பிரசாரத்திற்காக அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனத்திடமிருந்து, சட்டவிரோதமான முறையில் அதிக அளவிலான நிதிகளைப் பெற்றுள்ளார்.

மேலும் அந்த வழக்கு விசாரணை தொடர்பான இரகசிய தகவல்களை வழங்கக் கோரி, நீதிபதி கில்பர்ட் அஜிபர்ட்டிடம் சர்கோஸி பேரம் பேசி உள்ளார்.

இதற்கிடையில் 2012இல் நடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில், அனுமதிக்கப்பட்ட அளவை விட சர்கோஸி இரு மடங்கு அதிகமாக பணம் செலவழித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட தீர்ப்பில், சர்கோஸிக்கு ஓராண்டு வீட்டுச் சிறை விதிக்கப்பட்டது. வீட்டுச்சிறையின்போது சர்கோஸி, கையில் மின்னணு கண்காணிப்பு கருவியை அணிந்திருக்கவும் உத்தரவிடப்பட்டது.

இந்த தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய, சர்கோஸிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், தண்டனை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (7-5)

# கின்னஸ் சாதனை படைத்த அமெரிக்க மாற்றுத் திறனாளி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்தைச் சேர்ந்த 23 வயதான சியோன் கிளார்க். 4.78 செகண்டில் 20 மீற்றர் வரை தனது கைகளால் விரைவாக நடந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இதற்கான சான்றிதழை கின்னஸ் நிறுவனம் வழங்கியுள்ளது.

உடலின் மேல் பாகங்களை மட்டும் வைத்து இந்தச் சாதனையை இவர் படைத்துள்ளார்.

மல்யுத்த மற்றும் சக்கர நாற்காலி பந்தய வீரரான இவர் 2024 ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தம் மற்றும் சக்கர நாற்காலி பந்தய விளையாட்டுகள் இரண்டிலும் பங்கேற்கும் முதல் அமெரிக்க தடகள வீராக வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளார். (7-5)

# உலகில் முற்றிலும் அழிந்துபோன 23 வகையான உயிரினங்கள்

## அமெரிக்க ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

23 வகையான உயிரினங்கள் உலகளவில் முற்றிலும் அழிந்து விட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க மீன்கள் மற்றும் வன உயிரின அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

11 வகையான பறவைகள், ஒரு வௌவால் இனம், இரு மீன்கள் வகை, 8 வகையான சிப்பி இனம் ஆகியவை முற்றிலும் அழிந்து விட்டதாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் மிகப் பெரிய மரங்கொத்தியான தந்தம் போன்று கடினமான வாயமைப்புக் கொண்ட பறவை 1967 ஆம் ஆண்டுக்குப் பின் பார்க்கப்படவில்லை.

இதேபோல் பேச்மென்ஸ் வாப்ளர் என்ற பாடும் பறவையும் 1967ஆம் ஆண்டுக்குப் பின் பார்க்கப்படவில்லை.

இது மனிதர்களால் ஏற்பட்ட மாபெரும் அழிவு என்று கூறப்படுகிறது. ஹவாயியைச் சேர்ந்த எட்டுப் பறவை இனங்களும் பசிபிக் தீவான குவாமில் இருந்த சிறிய மரியானா பழம் தின்னும் வௌவால் இனம் ஒன்றும் முற்றாக அழிவடைந்த பட்டியலில் உள்ளன.

'இந்த உயிரினங்கள் ஒவ்வொன்று பற்றியும் தற்போது கிடைக்கக்கூடிய சிறந்த மீளாய்வுகளைப் பயன்படுத்தியே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது' என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது (7-5)

# சிங்கம் 2 வில்லன் டானியின் நண்பன் போதைப் பொருள் கடத்தலில் கைது

(பெங்களூர்)

நடிகர் சூர்யாவின் சிங்கம் 2 திரைப்படத்தில் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் மன்னன் டானியின் நண்பனாக நடித்த நைஜீரியா நடிகர் மெல்வின் நிஜத்தில் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் பெங்களூரில் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சோதனையின் போது கிடைக்கப்பெற்ற எம்டி.எம்.ஏ. போதைப் பொருள், ஹாசிஸ் கஞ்சா எண்ணெய் ஆகியவற்றை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இதன் மொத்த மதிப்பு ரூபாய் 8 இலட்சம் ஆகும். மேலும் ரூபாய் 5 ஆயிரம் பணம், செல்போன் ஆகியவற்றையும் மெல்வினிடம் இருந்து பொலிஸார் பறிமுதல் செய்தனர்.


தூத்துக்குடி விமான நிலையத்தில் சட்டவிரோதமாக நுழைந்ததற்காக டானி சானியை சூரியா கைது செய்யும் காட்சிகளிலும், சூரியா டானியுடனும் அவரது குழுவினருடனும் சண்டையிடும் போதும் 'சிங்கம் 2' கிளைமாக்ஸ் காட்சியில் செய்யும் மால்வினைக் காணலாம். (7-5)

# உயிரிழந்த பிள்ளைகளுக்காக போராடவில்லை

# உயிருடன் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்காகவே போராடுகிறோம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டடோரின் உறவுகள்









(யாழ்ப்பாணம்)

**எமது குழந்தைகளுக்கு உயிர் வாழும் உரிமை இல்லையா, இலங்கை இராணுவத்திடம் கையளித்த சிறுவர்கள் எங்கே? உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடமா? சின்னச்சிறார்களும் பயங்கரவாதிகளா? கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது, அண்மையில் ஜனாதிபதி ஜக்கிய நாடுகள் சபையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன், அதற்கெதிரான கோஷங்களும் எழுப்பப்பட்டன.

சில சிறுவர்கள் பெற்றோருடன் ஓமந்தையை தாண்டி வந்த நிலையில் காணாமல் போயுள்ளனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவிமனுவல் உதயச்சந்திரா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளனர்.

மேலும் அவர் தெரிவிக்கையில் புலம் பெயர்ந்த தமிழர்களுடன் ஜனாதிபதி கதைக்க உள்ளதாக தெரிவித்துள்ளார். முதலில் பிள்ளைகளையும், உறவுகளையும் காணாது தேடி அலையும் உறவுகளாகிய எங்களுடன் கதையுங்கள்.

உயிரிழந்தபிள்ளைகளுக்காக நாங்கள் போராடவில்லை. உயிருடன் உங்களிடம் ஒப்படைத்த பிள்ளைகளைக் கேட்டு போராடுகிறோம். உலக நாடுகளை ஏமாற்றுவது போல் எங்களையும் ஏமாற்ற வேண்டாம் என தெரிவித்துள்ளார். (7-5-18-33-250-281-285)

# வீதி வியாபாரங்களில் சனநெரிசல் காணப்படுமாயின் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## வவு.நகரசபைத் தலைவர்

(குருமன்காடு)

வீதியோர வியாபாரங்களில் சனநெரிசல் காணப்படுமாக இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 100 நகர உருவாக்க திட்டதின் கீழ் வவுனியாவில் மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து வைத்தியசாலை சுற்று வட்ட வீதி வரைக்கும் நடைப்பாதைக்கான திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது.

அத்துடன் தற்போது மக்கள் வழமையான நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் சில வீதியோர வியாபாரங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. கொவிட் கட்டுப்பாட்டுக்காக இவ்வாறான நிலைமைகள் காணப்படும் போது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கொவிட் மரணங்கள் குறைக்கப்பட்டுள்ளது. அதனை நாம் தொடர்ந்தும் தக்க வைத்து முன்னோக்கி செல்ல வேண்டும். அதற்கு மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நகரசபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (7-5-6-250)




சிறுவர் தினத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மரம் நடுகை திட்டத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்துள்ளார். (படம் : தேவானந்தன்)

# பூநகரியில் புதிய நீர் இணைப்புக்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை

(தர்மபுரம்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பள்ளிக்குடா கிராமஉத்தியோகத்தர் பிரிவில் வசிக்கின்ற மக்களுக்கான புதிய நீர் இணைப்புக்கான விண்ணப்பங்களை வழங்கும் நடமாடும் சேவையானது நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே மேற்படி கிராம உத்தியோகத்தர்பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் உத்தியோகத்தர்கள் வீடு வீடாக வருகை தந்து புதிய நீர் இணைப்புக்கான விண்ணப்பப் படிவங்களைப் பொது மக்களுக்கு வழங்கவுள்ளனர். நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதான நீர்க்குழாயிலிருந்து 25 மீற்றர் அதாவது 82 அடி வரைக்கும் புதிய இணைப்புக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும் என்பதனையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் 0212283981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட பொறியியலாளர் எந்திரி செ. சாரங்கன் அறிவித்துள்ளார். (7-5-6-316)



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் கணுக்கேணி வட்டாரத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் குமாரபுரம் கிராமத்தின் ஐந்தாவது குறுக்கு வீதியின் ஒரு பகுதி மற்றும் கணுக்கேணி கிழக்கு கிராமத்தின் முன்பள்ளி வீதியின் முதலாவது ஒழுங்கை என்பன தார் வீதியாக அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன. (படம் : கிருஷ்ணகுமார்)

# சைனட்குப்பி கடத்தியோருக்கு இரண்டாண்டு கடூழிய சிறை

(தமிழகம்)

இராமநாதபுர மாவட்டம் உச்சிப்புளியில் இருந்து சுமார் 500 சைனைட் குப்பிகள் மற்றும் சைனைட் பவுடர்களை இலங்கைக்கு கடத்த முயன்ற போது இராமநாதபுரம் க்யூ பிரிவு பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இதில் தப்பி ஓடிய ஒருவரை கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் வைத்து க்யூ பிரிவு பொலிஸார் கைது செய்து சென்னை புழால்சிறையில்அடைத்தனர். இந்த வழக்கு இராமநாதபுரம் மாவட்டம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் இரண்டு ஆண்டுகள் தண்டனை மற்றும் 2000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 4 ஆண்டுகள் சிறையில் இருந்தமையினால் சிறையில் இருந்த காலத்தை தண்டனைக் காலமாக எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (7-5-6-100)

# புலனாய்வு, பாதுகாப்புத்துறைகள் மிகவும் வினைத்திறனானவை

## சரத் வீரசேகர பெருமிதம்

(கொழும்பு)

**எமது புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்புத் துறை மிகவும் வினைத்திறனாக செயற்பட்டு வருதாலேயே நாட்டில் எந்தவொரு அசம்பாவிதமோ பிரச்சினைகளோ இடம்பெறாதுள்ளது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்க பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டின் பிரதானமானது தேசிய பாதுகாப்பாகும். தேசிய பாதுகாப்பானது திறம்பட செயற்படுவது புனாய்வுப் பிரிவினர் கீழேயே தங்கியுள்ளது.

எமது புனைாய்வுத்துறை மற்றும் பாதுகாப்புத் துறை மிகவும் வினைத்திறனாக செயற்பட்டு வருதாலேயே நாட்டில் அசம்பாவிதமோ பிரச்சினைகளுமோ இடம் பெறாதுள்ளது" என தெரிவித்தார். (4-5)

# ரிஷாட்டிற்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை தொடர்ந்தும் விளக்மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, அவரை எதிர் வரும் 14ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டில் பணிபுரிந்து வந்த மலையகச் சிறுமியொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பலனின்றிஉயிரிழந்தார்.

இந்த சம்பவத்தின் 5 ஆவது சந்தேக நபராக ரிஷாட் பதியுதீன் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## ஐஸ்வர்யம் அருளும் ஔவையார் விரதம்



### விரதம் இருக்கும் முறை

பெண்கள் விரதநாளன்று அதிகாலை எழுந்து எண்ணெய் தேய்த்து மஞ்சள் பூசிக்குளித்து விரதம் மேற்கொள்ள வேண்டும். அன்று இரவு 12 மணிக்கு விரதம் இருக்கும் பெண்கள் ஒன்றுகூடுவர். அப்போது வீட்டில் இருக்கும் ஆண்கள் அனைவரும் வெளியே சென்று விடுவார்கள். அவர்கள் இந்த விரதத்தைப் பார்ப்பதற்கு அனுமதி கிடையாது. சிறுவர்கள்கூட இந்த விரதத்தின்போது வீட்டில்இருக்க அனுமதிகிடையாது.

விரதத்தன்று உப்புச்சேர்க்காத பச்சரிசிமாவினால்செய்யப்பட்ட கொழுக்கட்டையை மாவாகப் பிசைந்து நீராவியில்வேகவைத்து, அதை நைவேத்தியமாகப் படைத்து, அதில் வேப்பிலை, புளியமிலை, புங்க இலைகளைப் பரப்பி அதில் படைத்து சாணத்தால் பிள்ளையார் செய்து வணங்க வேண்டும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஜேர்மனின் இராணுவ அதிகாரிகள் நாளை இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு பொறுப்பான ஜேர்மனின் இரண்டு இராணுவ அதிகாரிகள் நாளை 3 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜேர்மன் இராணுவ அதிகாரிகளின் இந்த வருகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று 2022 ஜனவரி9 முதல் 13 வரை ஜேர்மனிய போர் கப்பலான "பேயரின்" இலங்கைக்கான வருகைக்கான திட்டத்தைத் தயாரிப்பதாகும் என்று ஜேர்மனிய தூதரகம் தெரிவித்துள்ளது. "பேயர்ன்" என்ற கப்பல் கொழும்புக்கு வரும் நிலையில் 2022 ஆம் ஆண்டு ஜனவரியில், இலங்கை கடற்படையுடன் கடலில் கூட்டுப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.(4-5)

## இடியுடன் கூடிய மழைக்கு இன்று சாத்தியம்

(கொழும்பு)

இன்று இலங்கையில் பெரும்பாலான இடங்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கைக்கு அண்மையாக கீழ் வளிமண்டல தளம்பல் நிலை உருவாகியுள்ளதால் இன்று நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 100 மிமீக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (4-5)

## வகுப்பில் பங்குபற்றாத மகனை அடித்து கொன்ற தந்தை

(கொழும்பு)

தென்னிலங்கை தந்தை ஒருவர் மகன் ஒன்லைன் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடாமையினால் கண்டித்துள்ளார். கோபம் காரணமாக மகனின் முதுகின் மீது துடைப்பத்தால் அடிக்க தந்தை முயற்சித்த போது அதனை தவிர்க்க மகன் முயற்சித்துள்ளார். இதன் போது அந்தத் தாக்குதல் மகனின் தலையில் விழுந்தமையினால் அவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த மகன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு அவர் உயிரிழந்துள்ளார். (4-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 160 |
| தக்காளி | 80 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 |
| கோவா | 150 | 160 | 160 |
| கரட் | 160 | 180 | 160 |
| பூசனி | 60 | 80 | 60 |
| புடோல் | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 160 |
| பாகற்காய் | 200 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 200 |
| பயற்றங்காய் | 220 | 160 | 240 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 280 | 180 | 240 |
| போஞ்சி | 240 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 50-70 |
| இராசவள்ளி | -- | 250 | -- |
| வெங்காயப்பூ | -- | 150 | -- |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 30 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 20 | 100 |

### சேதன உர இறக்குமதி

# சீன நிறுவனத்திற்கே தடை

# சீனாவிற்கு தடையல்ல

## விவசாய அமைச்சு

**(கொழும்பு)**

**சீனாவில் இருந்து சேதன பசளை உரம் இறக்குமதி செய்வது தடை செய்யப்படவில்லை. மாறாக மாதிரிகளை இறக்குமதி செய்த நிறுவனத்திடமிருந்து சேதனப் பசளை உரத்தை இறக்குமதிசெய்வது தடை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாயத் துறை அமைச்சின் ஊடகச் செயலாளர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, சீனாவின் சேதன பசளை இறக்குமதி தடை செய்யப்படும் என விவசாயத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட முனைவதாவது, சீன நிறுவனத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதனப்பசளை உரத்தில் நாட்டின் மண்வளத்திற்கும், காலநிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் அடங்கியிருப்பது இரண்டு முறைமேற்கொள்ளப்பட்ட ஆய்வு பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை கருத்திற்கொண்டு குறித்த நிறுவனத்தில் இருந்து சேதன பசளையை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர சீனாவில் இருந்து சேதனப் பசளை இறக்குமதி செய்வது தடை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட சேதன உரப் பசளையில் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து விவசாயத் துறை அமைச்சு சீனாவில் இருந்து சேதனப் பசளை இறக்குமதிசெய்வது தடை செய்யப்படும் என தலைப்பிட்டு ஊடக அறிக்கையை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# மக்களின் செயற்பாடே இம்மாதத்தின் நிலைமையை தீர்மானிக்கும்

## இராணுவத் தளபதி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்ட போதிலும் மக்களின் பொறுப்பான செயற்பாடுகளே இம் மாதத்தின் நிலைமையைத் தீர்மானிக்கும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பாட்டால் மீண்டும் கொவிட் தொற்று அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஒரு மாதத்திற்கும் அதிககாலம் நாட்டை மூடி கொவிட் தொற்றினை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டோம். மக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு அவதானமிக்க முறையில் செயற்பட வேண்டும்.நாட்டை மூடியே வைக்க முடியாது. கடந்த காலங்கள் முழுவதுமாக மக்கள் வழங்கிய ஆதரவிற்கமைய தொற்றினை கட்டுப்படுத்த முடிந்தது.

இந்த காலப்பகுதிகளிலும் அதே போன்று அவதானமாக செயற்பட்டால் மாத்திரமே நாட்டை நடத்தி செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய அரசஊழியர்களின் பணிகள் நேற்று முதல்வழமையான முறையில் நடத்தி செல்லப்படவுள்ளது. மேலும் அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# ஓய்வூதியம் வழங்குவதற்கே அரசிடம் பணம் இருக்காது

## ரணில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

2035ஆம் ஆண்டுக்குள் ஓய்வூதியம் வழங்குவதற்கு நாட்டில் பணம் இருக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். சமூக ஊடக ஆர்வலர்களுடன் நேற்று சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,

"கொவிட் தொற்று நோயால் ஏற்பட்ட நெருக்கடியை மட்டுமே ஏனைய நாடுகள் எதிர்கொள்கின்றன. ஆனால் கொவிட் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியுடன் நாமே உருவாக்கிய நெருக்கடி இரண்டுமே நாட்டில் உள்ளது.

மற்ற நாடுகளில் அந்நிய செலாவணி கையிருப்பு குறையவில்லை. எனினும், நாங்கள் நேபாளத்துக்குக் கீழே இருக்கிறோம் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில், ஓய்வூதியம் வழங்க 2035 இற்குள் அரசிடம் பணம் இருக்காது. இன்று நாட்டுக்கு அந்நிய செலாவணி இல்லை. உள்ளூர் வருமானம் இல்லை. முன்பு இதுபோன்ற சூழ்நிலை இல்லை.நாங்கள் அரசாங்கத்தை ஒப்படைத்து விட்டு சென்ற போது ஏழரை பில்லியன் டொலர்கள் இருப்பு இருந்தது. ஆனால் இன்று கையிருப்பில் இரண்டு பில்லியன் டொலர்கள் மட்டுமே உள்ளன.

நாங்கள் செய்தது பொருளாதாரத்தை மறு சீரமைத்து கடன் சுமையை குறைப்பதாகும். சம்பளத்தை அதிகரித்தது மட்டுமல்லாமல் முதலீட்டாளர்களுக்கு தேவையான சூழலை மேம்படுத்தினோம்." என அவர் மேலும் தெரிவித்தார்.(4-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மன நோயாளிகள்

ஒருவர் மிகக் கவலையோடு வந்தார். ஏன் இப்படி ஒரு மாதிரியாக வருகின்றீர்கள் என்று கேட்டேன். என்னைப் பார்த்து ஒருத்தன் பைத்தியம் என்று சொல்லி விட்டான் சேர். அவன் அப்படிச் சொன்னதற்கு பின்பு நான் இப்படி ஆகிவிட்டேன் என்றார்.

அதற்காக நீங்கள் பெருமைப்படுங்கள் என்றேன். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் என்னை ஒரு மாதிரியாக பார்க்க ஆரம்பித்து விட்டார்.

நான் ஓஷோ சொல்லியிருக்கின்ற சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன்.

இந்த உலகத்திலே பல பெரிய மேதாவிகள் எல்லாம் சாதாரண மக்கள் கண்ணுக்குப் பைத்தியமாகத்தான் தெரிந்திருக்கின்றார்கள். ஏன் என்றால் மற்றவர்கள் மாதிரி அவர்கள் கவலைப்படுவதில்லை, எதற்கும் இறுக்கம் அடைவதில்லை, சாவைக் கண்டு பயப்படுவதில்லை, அற்பமான மகிழ்வுக்கு ஆசைப்படுவதில்லை.

அவர்கள் முழுமையாக வாழ்கின்றார்கள். மற்றவர் களை இது பாதிக்கின்றது. ஏன் என்றால் இவர்களாலே அவர்கள் மாதிரி அலட்டிக்கொள்ளாமல் இருக்க முடிவதில்லை. அதனால் வெறுக்க ஆரம்பித்து விடுகின்றார்கள்.

அவன் கிடக்கின்றான் பைத்தியக்காரன் என்று சொல்லி அவர்களுக்குள்ளே ஆறுதல் அடைய முயற்சி செய்கின்றார்கள்.

ஓர் உண்மை என்ன தெரியுமா? இந்த உலகத்தில் பைத்தியக்காரர்களும் புத்திசுவாதீனம் இல்லாதவர்களுக் கும் தான் மகிழ்ச்சியாகவும் கொண்டாட்டமாகவும் இருக் கிறார்கள். அதனால் நமக்கெல்லாம் புத்திசுவாதீனத்துடன் கூடிய ஒரு பைத்தியக்காரத்தன்மை இருக்கிறது நல்லது தான். அப்படி இருந்தால் தான் வாழ்க்கையைக் கொண் டாட முடியும்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருத்தர் சிகிச்சைக் காக சேர்ந்திருந்தார். சேர்ந்து ஒரு வருடமாகியது. தான் குணமாகி விட்டேன் என்கின்றது அவருக்குத் தெரிந்து போய்விட்டது. டாக்டரிடம் விபரத்தைச் சொன்னார். அவரும் சொன்னார்...

நீங்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கும். இருந்தா லும் உங்களை இங்கேயே வைத்திருந்து சில சோதனைகள் எல்லாம் செய்து பார்த்துவிட்டு அதன் பின்பு வீட்டுக்கு அனுப்புகின்றோம் என்றார்.

அதேபோல் சோதனைகள் எல்லாம் செய்து பார்த்தார். இவர் சொல்வது உண்மைதான் என்று தெரிந்தது. வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார். அதன் பின்பு இவர் தன்னுடைய அனுபவங்களைச் சொன்னார்.

எப்படி இருந்தது மருத்துவமனை வாழ்க்கை? என்று கேட்டார்கள் நண்பர்கள் எல்லோரும். அப்பொழுது இவர் சொன்னர்...

நான் ஒரு வருடம் பைத்தியங்களோடு பைத்தியமாக வாழ்ந்தேன். அதிலே கொஞ்சம் கூட சிரமம் தெரியவில்லை. ஆனால் நான் புத்தி தெளிந்த பின்பும் ஒரு வாரம் அவர்களோடு இருந்தேன். அந்த ஒரு வாரம் எனக்கு ஒரு யுகமாகத் தெரிந்தது. அவ்வளவு கஷ்டம் என்றார்.

அதனால் ஒரு கூட்டத்தில் இருந்து வேறுபட்டு வாழ்வது என்பது கொஞ்சம் சிரமம்தான். பைத்தியங்களுக்கு மத்தி யில் பைத்தியமாக இருந்து விடலாம். பைத்தியங்களுக்கு மத்தியில் புத்தி சுவாதீனம் உள்ளவனாக இருக்கிறதற்கு மிகவும் சாமர்த்தியம் தேவைப்படுகின்றது.

ஹிட்லர் ஒரு சமயம் ஒரு பைத்தியக்கார மருத்துவ மனைக்குப் போயிருக்கின்றார். பார்வையிடுவதற்காக மன நோயாளிகளையெல்லாம் வரிசையாக நிறுத்தி வைத்திருந் தார்கள். அவர் வந்தவுடன் எல்லோரும் ஹிட்லர் வாழ்க என்று கத்த வேண்டும் என்று அங்கே உள்ள டாக்டர் சொல்லி வைத்திருந்தார்.


ஹிட்லர் வந்தார். சொல்லி வைத்தது மாதிரியே எல்லோ ரும் கத்தினார்கள்.ஒருத்தர் மட்டும் கத்தாமல் அமைதியாக நின்று கொண்டு இருந்தார்.

ஹிட்லர் அவரிடம் போனார். ஏன் நீங்கள் மட்டும் ஹிட்லர் வாழ்க என்று சொல்லாமல் நிற்கின்றீர்கள் என்றார். அதற்கு அவர் மெதுவாக நான் பைத்தியக்காரன் இல்லை டாக்டர் என்றார்.



# சிறுவர் அரங்கம்

## நட்புக்குத் துரோகம் செய்யக்கூடாது



ஒரு காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் நண்பர்களாகப் பழகத் தீர்மானித்தன. இரண்டும் சேர்ந்து ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச்செல்ல வேண்டும்என்றும், இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும், நரியும், கழுதையும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள்நரி, தன்நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக தன் இருப்பிடத்தை விட்டு கழுதை இருக்குமிடம் நோக்கிச்சென்று கொண்டிருந்தது.

சிறிது தூரம் சென்றதும், அந்தப் பக்கமாக சென்ற சிங்கத்தைக்கண்டு நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா? என யோசித்தது.

ஒரு வழி நரிக்குப் புலப்பட்டது. அதாவது, தன் நண்பன் கழுதையைக் காட்டிக் கொடுத்துவிட்டு, தான் தப்பித்துக் கொள்வது என்பதுதான் அந்த வழி. நரி உடனே சிங்கத்தை நோக்கி, ""மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசிசற்றும் அடங்கப் போவதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும். என் நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டைச்செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்!" என்று கூறிற்று.

(தொடரும்)

# மகாபாரதம்




உண்ண உணவும், உடுக்க உடையும் ஓராண்டு தங்க இடமும் கொடுத்தான் திருடன். வாழ்க்கை நடத்த ஒரு நங்கையையும் அளித்தான். இவற்றைப் பெற்ற அந்த அந்தணன் இன்பமாகக் காலம் கழித்தான்.

நன்றியுள்ள அந்த அந்தணன் அந்த நங்கையின் குடும்பத்தையும் காப்பாற்றி வந்தான். கௌதமன் என்னும் பெயருடைய அவன், வேடர்கள் நிறைந்த அந்த ஊரில் ஓர் ஆண்டு வாழ்ந்தான்.

வேடர்களோடு சேர்ந்த அந்தணன் வேட்டைத் தொழிலில் தேர்ச்சி பெற்றான். நாள்தோறும் காட்டுப் பறவைகளைக் கொல்வதை வழக்கமாகக் கொண்டான். இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

ஒருநாள் அந்த ஊருக்கு வேறொரு அந்தணர் வந்தார். மரவுரி தரித்தவர். வேதம் அறிந்தவர். ஆசாரம் மிக்கவர். அவர் ஒரு பிரம்மச்சாரி.

கௌதமனின் ஊர் தான் அவர் ஊரும். கௌதமரின் நண்பரும் கூட. உணவிற்காக மற்றவரிடம் செல்லாமல் ஒரு அந்தணர் வீட்டைத் தேடிக் கடைசியாக கௌதமனின் வீட்டிற்கு வந்தார். அப்போது கௌதமன் வீடு திரும்பியிருந்தான். அவனைக் கண்ட அந்தணர்க்கு ஆச்சரியமாய் இருந்தது. அவன் கையில் வில் இருந்தது. தோளில் கொல்லப்பட்ட அன்னப்பறவை இருந்தது. அவரை அப்படிக் கண்ட அந்தணர் வெட்கித் தலை குனிந்தார்.

கௌதமனை நோக்கி "என்ன காரியம் செய்தாய்? வேடர்தொழிலை எவ்வாறு மேற்கொண்டாய்? உன் பெருமையை மறந்தாயா? நீ கீழான செயலைச்செய்யலாமா? நீ உடனே இங்கிருந்து போய்விடு" என்று கூறினார்.

அந்தணரின் அறிவுரையைக் கேட்ட கௌதமன், துயரத்துடன், "நான் ஏழை. அந்த வறுமை என்ன இந்த நிலைக்குத் தள்ளிவிட்டது. இப்போது உம்மால் நான் தெளிவு பெற்றேன். ஓரிரவு மட்டும் இங்கு தங்கிப் பின் வேறிடம் செல்லலாம் "என்று கூறினான். அந்த அந்தணரும் பசியுடன் இருந்த போதும் அவனது வேண்டுகோளை ஏற்று அங்குத் தங்கினார். பொழுது விடிந்து அவ்விருவரும் ஊரை விட்டுப் புறப்பட்டனர்.

(தொடரும்)

*உங்களுக்குச் சரியான ஆலோசனை வழங்கக் கூடிய மனிதர் இந்த உலகில் யார் இருக்கிறார்? அவர் நீங்களேதான்.*

*– ஜெர்மானியப் பழமொழி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ். மாநகரக் குளங்கள் புனரமைப்பு ஏனையவர்க்கும் முன்மாதிரியான செயல்

பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்கள் குறைபாடவும் குற்றம் சொல்லவுமே உள்ளன என்ற பொது விமர்சனம் இருக்கவே செய்கின்றது.

அந்த விமர்சனத்தில் ஓரளவு உண்மை இருந்தாலும் செய்கின்ற நல்ல பணிகளைப் பாராட்டுவது ஊடகத் தர்மம் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

அந்த வகையில், யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிக்குள் இருக்கக்கூடிய குளங்கள் அதிவேகமாகப் புனரமைக்கப்படுவது கண்டு வியப்படையாதவர்கள் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு, யாழ்.மாநகர முதல்வர் பதவியைப் பொறுப்பேற்ற விசுவலிங்கம் மணிவண்ணன் அவர்கள் குளங்களைப் புனரமைப்பதில் மிகுந்த கருசனை கொண்டு செயற்படுகின்றார் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதிலும் பரோபகாரிகள், வர்த்தகர்கள் மற்றும் கொடைவள்ளல்களின் உதவியோடு குளங்களைப் புனரமைக்கும் பணியை யாழ். மாநகர சபை முன்னெடுத்திருப்பது ஏனைய நகர, பட்டின, பிரதேச சபைகளுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகும்.

ஆம், யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட ஆரியகுளத்தின் புனரமைப்புப் பணிக்கு தியாகி அறக்கொடை அமைப்பின் இயக்குநர் வாமதேவன் தியாகேந்திரன் அவர்கள் நிதிப் பங்களிப்பை வழங்கி ஆரியகுளத்தை அழகுபடுத்தும் திட்டத்தை அமுல்படுத்த உதவி வருகிறார் என்ற தகவல் உற்சாகத்தைத் தருவதாக உள்ளது.

பொதுவில் குளங்களைப் புனரமைக்கின்ற பணி முற்றுமுழுதாக அரசினுடையது என்றே கருதப்பட்டது.

ஆனால் அந்த நிலையை மாற்றி, தனிநபர்களும் வர்த்தகர்களும் பொதுமக்களும் உதவ முன்வந்தால், எங்கள் தாயகத்தில் இருக்கக் கூடிய எங்களுக்குரிய குளங்களை நாங்களே புனரமைத்து அழகுபடுத்த முடியும் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆம், யாருமே திரும்பிப் பார்க்காமல் இருந்த யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் தற்போது நடைபெறும் புனரமைப்புப் பணிகளை பார்க்கும்போது, அதன் வனப்பு எவ்வாறாக அமையும் என்பதை ஊகிக்க முடிகிறது.

இதேபோல யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியின்கண் அமைந்த குளம் மிக நீண்ட காலங்களுக்குப் பின்னர் இப்போது புனரமைக்கப்படுவதும் அதற்கு அப்பகுதியிலுள்ள பிரபல வர்த்தகர்கள் உதவ முன்வந்துள்ளதுமான தகவல்களை அறியும்போது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறாக, யாழ்.மாநகர சபை முதல்வரால் முன்னெடுக்கப்படும் குளங்களின் புனரமைப்பும் அதற்கு வர்த்தகப் பெருமக்கள் வழங்குகின்ற நிதி உதவிகளும் மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக அமைந்து, எங்கள் பிரதேசத்தின் எல்லாக் குளங்களையும் அழகுறவைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

## கௌதாரிமுனை மக்களுக்கு வயற்காணி பகிர்ந்தளிப்பு

(கிளிநொச்சி)

பூநகரி கௌதாரிமுனை மக்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் 100 பயனாளிகளுக்கு வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரின் இணைப்பாளர் வை.தவநாதன் தலைமையில், பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் இராசலிங்கம், கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் பகீரதன், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர் இணைந்து சீட்டிழுப்பு முறையில் சுமார் 100 ஏக்கர் காணியை பயனாளிகளுக்கு பகிர்ந்தளித்தனர்.

கௌதாரிமுனை பிரதேசத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் சென்றிருந்தபோது அந்தப் பகுதியிலுள்ள வயல் காணிகளை தமக்கு பெற்றுத் தருமாறு பிரதேச பொது மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைய இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

குறித்த காணிகளை நெற்செய்கைக்கு ஏற்ற வகையில் தயார்ப்படுத்தும் வகையில், 2.7 மில்லியன் ரூபா செலவில் காணியை உழுது, பண்படுத்தி, வரம்பு கட்டும் பணிகளை கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் தேவரதன் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், தலா ஒரு ஏக்கர் வீதம் 100 பயனாளர்களுக்கு சீட்டிழுப்பின் மூலம் காணிகள் அடையாளப்படுத்திக் கொடுக்கப்பட்டது.

(ம-3)

## ஜி.எஸ்.பி பிளஸ் வரி சலுகையை நிறுத்துங்கள்

### சிவில் சமூக பிரதிநிதிகள்

இலங்கைக்கான ஜிஎஸ்.பிபிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தவேண்டும் எனவும் இலங்கையின் வடகிழக்கு மக்களுக்கு காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை அதனை வழங்கக் கூடாது எனவும் வடக்கு கிழக்கு சிவில் அமைப்பு பிரதிநிதிகள் நேற்றைய தினம் வலியுறுத்தினர்.

நேற்றைய தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சிவில் சமூக பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

குறித்த ஊடக சந்திப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், காணி ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்டோர், கடற்றொழிலாளர் சங்கம் உள்ளிட்ட சில அமைப்புக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## வவுனியாவில் வீடு உடைத்து பணம், நகை கொள்ளை

(வவுனியா)

வவுனியா குடியிருப்பு பகுதியில் வீடு ஒன்றினை உடைத்து பெருமளவு பணம், நகை கொள்ளையிடப்பட்டுள்ளது

நேற்று மாலை வீட்டில் யாருமில்லாததை அறிந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டின் பிரதான வாயிலை உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர்.

இதன்போது அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நான்கு பவுண் நகை மற்றும் 3 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் என்பனவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு முறையிட்டுள்ள நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(ம-3,250,299)

## மருத்துவக் குறிப்பு

**வெள்ளரிப்பிஞ்சை பச்சையாக மிளகுத்தூள் கலந்தும் சமைத்தும் சாப்பிட உடல் உஷ்ணம் குறையும். வெண்குஷ்டத்தைக் குணமாக்கும்.**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 03 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அவுனோர் பிறைவேற் லிமிட்டெட், தம்றோ, பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (மின்சாரசபை), ஆளுநர்விடுதி, சுகாதார அமைச்சு பண்ணை, ஜபிசி தமிழ், யாழ். மாவட்ட செயலகம், நொதேர்ண் மருத்துவமனை, சிறைவளாகம், சூரிய உதயம் (வினஸ்வைத்தியசாலை) துளசி மகால், துரையப்பா விளையாட்டரங்கு, யு.எஸ்.விடுதி, பி.சி.சி.சி.ஏ.எஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் கோட்டை, பலாலி வீதி, சிவன் அம்மன் வீதி சந்தி, இலுப்பையடிச் சந்தி, கச்சேரி நல்லூர் வீதிச் சந்தி, முலவை, பண்ணை வைத்தியசாலை, பலாலி வீதி, பண்ணை பீஷா கட் மற்றும் ஜபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவெனியு, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ். மருத்துவமனை, மணியந்தோட்டம், ஐஸ் தொழிற்சாலை, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், பழைய பூங்காவீதிகொழும்புத் துறை, பாசையூர், பெரியகோவில், உதயபுரம், வெளிவாரி பட்டப் படிப்புகள் நிலையம், திண்ணை விடுதி, கொமர்ஷல் வங்கி, பலாலி வீதி, பனிக்கர் லேன் சந்தி, தலங்காவில்பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி-சந்தை, சுப்பர்மடம் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை மருத்துவமனை, மாலுசந்தி, தொலைத் தொடர்பு நிலையம், பாரதிதாசன் வாசிகசாலை, இலகடி, இன்பருட்டி, காந்தியூர், மாலுசந்தி, மந்திகை அம்மன் கோவில், முத்துமாரியம்மன் கோவில் அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரி மூலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** நியு ஸ்ரீல் பிறைவேற் லிமிட்டெட்-இரும்புத் தொழிற்சாலை, ஆண்டியப் புளியங்குளம், புதுக்குளம், சின்னசிப்பிக்குளம், தந்திரிமலை வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

(நி - 5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### ஒருபோதும் பயம் கூடாது

❖ உங்கள் உடல், மனம், அறிவு இம்மூன்றையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென்று ஒதுக்கி விடுங்கள். அவற்றை மனதிற்குள் திணிக்காதீர்கள்.

❖ வஞ்சனையால் எதையும் சாதிக்க முடியாது. அன்பாலும், உண்மையாலும் பெரிய செயலைக் கூட எளிதாகச் செய்து விட முடியும்.

❖ பரந்த உலகில் பிறந்த நீங்கள், அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால், உங்களுக்கும் கல்லுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.

❖ பயமின்மையே வாழ்வின் ரகசியம். நமக்கு என்ன நேருமோ என்று ஒருபோதும் பயப்படவேண்டாம். பிறரிடம் இருந்து வரும் உதவியை மறுக்கின்ற அந்த கணமே சுதந்திரம் வந்துவிடும்.

❖ நியாயமான கோபம் என்ற ஒன்று உலகில் இல்லை. ஏனெனில், அனைத்தையும் சமமாகக் காணத் தவறுவதால் தான் கோபமே உண்டாகிறது.

❖ எண்ணங்களுக்கு நாம் உரிமை உடையவர்கள். நல்ல எண்ணங்கள் நம்மை நோக்கி வருவதற்காக உள்ளங்களைத் திறந்து வைக்க வேண்டியது நம் கடமை.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

08

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



நூர்முகம்மது தரக்கியின் ஆட்சி, ஆப்கானிஸ்தானில் கம்யூனிச வாழ்வியல் முறையைக் கொண்டு வருவதில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியது. நில பங்களிப்பு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத் தப்பட்டன. திருமணச்சட்டங்கள் நவீனமயமாக்கப்பட்டன. பல சீர் திருத்தங்கள், இஸ்லாமிய அடிப் படைவாதத்திற்கு எதிராக இருந் தன. இவை ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களிடையே அதிருப் தியை தோற்றுவித்தது. இதனையடுத்து அமீன்தனது ஆதர வாளர்களுடன் ஜனாதிபதி மாளி கையைக் கைப்பற்றி ஜனாதிபதி தராக்கியை சிறைப்பிடித்தார். செப்டெம்பர், 1979 அமீன் அரசைத் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். அமீன், நாட்டின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

மேலும் ஆட்சியமைத்த 18 மாதங் களுக்குள்ளாகவே, உட்கட்சி பூசல் களும் அதிகமாகத் தொடங்கின. பிரதமர் நூர்முகம்மதுதரக்கியின் தலைமையில் ஒரு குழுவும், பாரக் கமால் தலைமையில் மற்றொரு குழுவுமாகப் பிரிந்து செயற்படத் தொடங்கினர். இந்தப் பிரிவானது ஆள் கடத்தல், பதவிப் பறிப்பு, கொலை வரை சென்றது. கட்சியின் மார்க்சிய மக்கள் பிரிவு ஆட்சியில் மிகுந்த செல் வாக்குப் பெற்றது. இதனை அடுத்து கர்மால் ஐரோப்பாவுக்குத் தப்பி ஓடினார். மார்ச் 1979 இல் கட்சியில் அமீனின் செல்வாக்கு அதிகமாயிற்று.

### ஹபிசுல்லாஅமீனின் ஆட்சி (1979)

அமீனின் ஜனாதிபதி மாளிகையில் வைத்து இடம் பெற்ற கொலை முயற்சி ஒன்றிலிருந்து அவர் தப்பினார். இதனையடுத்து அமீன் தனது ஆதரவாளர்களுடன் ஜனாதிபதி மாளிகையைக் கைப் பற்றி ஜனாதிபதிதராக்கியை சிறைப் பிடித்தார். செப்டம்பர் 14, 1979 அமீன் அரசைத் தனது முழுக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தார். அமீன், நாட்டின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சில நாட்களின் பின்னர் தராக்கி இனந் தெரியாத நோய் காரணமாக இறந்ததாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு கூறப்பட்டாலும் தராக்கி கொலை செய்யப்பட்டதாகவே கூறப்படுகிறது. அமீனின் ஆட்சியின் போது அவருக்கெதிராக சுமார் 18,000 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



ஹபீசுல்லா அமீன் நாட்டின் தலைவர் 1979

அவருக்கு கட்சியிலும் மக்களிடையேயும் செல்வாக்குச் சரிந்தது. உள்நாட்டு குழப்பங்கள் அதிகரித்ததுடன், உட்கட்சி பூசலும் தீவிரமடையத் தொடங்கின. இவரது காலத்தில் பல ஆப்கானியர்கள் ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் தப்பிச் சென்றனர்.

### சோவியத்தலையீடு (1979)

ஆப்கானிஸ்தானின் மீதான ஆங்கிலேயர்களின் ஆக்கிரமிப்புக் காலத்தில் இருந்தே சோவியத் ஒன்றியத்துக்கும், அதற்கும் சுமூகமான உறவு இருந்து வந்தது. மூன்றாம் ஆப்கான்-ஆங்கிலேயர் போருக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் தேசிய அரசை அங்கீகரித்த முதல் நாடு சோவியத் ஒன்றியம் தான்.

அதன் பிறகும் கூட ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்த அனைத்து ஆட்சியாளர்களும் சோவியத் ஒன்றியத்தின் ஆதரவாகவே இருந்தனர்.

மேலும் பாகிஸ்தான் புதிதாக அமைக்கப்பட்டபோது, பதானியர்கள் அதிகமாக வசிக்கும் அதன் தென் மேற்கு மாகாணங்களை தங்களுடன் இணைக்க வேண்டுமென ஆப்கானிஸ்தான் கோரியது.

இதற்கு பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அரசுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த போதும், சோவியத் ஒன்றியம் ஆதரவளித்தது. இதன் மூலம் ஆப்கான் வழியாக அரபிக் கடல் பிராந்தியத்தில் தங்களின் மேலாண்மையை நிறுவ முடியும் எனச் சோவியத் யூனியன் கருதியது.

ஆப்கானிஸ்தானின் மீதான ஆங்கிலேயர்களின் ஆக்கிரமிப்புக் காலத்தில் இருந்தே சோவியத் ஒன்றியத்துக்கும், அதற்கும் சுமூகமான உறவு இருந்து வந்தது. மூன்றாம் ஆப்கான்-ஆங்கிலேயர் போருக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் தேசிய அரசை அங்கிகரித்த முதல் நாடு சோவியத் ஒன்றியம் தான். அதன் பிறகும் கூட ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்த அனைத்து ஆட்சியாளர்களும் சோவியத் ஒன்றியத்தின் ஆதரவாகவே இருந்தனர்.

இதையடுத்து, தெற்காசியாவில் சோவியத் யூனியனின் மேலாண்மையை முறியடிக்கும் பனிப்போரின் ஒரு பகுதியாக, பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கத் தொடங்கியது.

மேலும் பாகிஸ்தானின் உளவுத் துறை மூலமாக, ஆப்கானிய கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்களும், பொருளாதார உதவிகளும் வழங்கத் தொடங்கியது. தொடந்து ஆப்கான்-பாகிஸ்தான் எல்லைகளில் இருந்த பயிற்சி முகாம்களில் கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

தெற்காசியாவில் சோவியத் யூனியனின் மேலாண்மையை முறியடிக்கும் பனிப்போரின் ஒரு பகுதியாக, பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கத் தொடங்கியது. மேலும் பாகிஸ்தானின் உளவுத் துறை மூலமாக, ஆப்கானியகிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்களும், பொருளாதார உதவிகளும் வழங்கத் தொடங்கியது.

கிளர்ச்சிக் குழுவினருக்கு அமெரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கத் தொடங்கியதை அடுத்து, 1978 இல் ஆப்கானிய அரசுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையே ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. இதன் படி அவசர காலங்களில் ஆப்கான் அரசு கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் தனது படைகளை அனுப்ப சோவியத் ஒன்றியம் ஒப்புக்கொண்டது.

இதனிடையே முகாஜிதீன் குழுக்களின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியதை அடுத்து, ஆப்கானிய அரசு 1978 ஒப்பந்தத்தை முன்னிறுத்திசோவியத் ஒன்றியத்தின் இராணுவ ஆதரவைக்கோரியது. இக்கோரிக்கை களை அடுத்து, 1979 யூன் 16 இல் தனது முதல் பீரங்கிப் படையைச் சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியது. இவை பர்காம் மற்றும் சிந்தாத் நகரங்களில் இருந்த விமானத் தளங்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்டன. மேலும் பல சிறப்புப்படையணிகளும் காபூல் நகர பாதுகாப்புக்கு அனுப்பப்பட்டது. தொடர்ந்து ஒரு மாத இடைவெளியில் பாதுகாப்புப்படையணிகளை தவிர்த்த போர்ப் படைகளையும் மிகப்பெரும் எண்ணிக்கையில் அனுப்புமாறு மீண்டும் ஆப்கான் அரசு சோவியத் ஒன்றியத்தைக் கேட்டுக் கொண்டது. 1979 ஒக்டோபர் 31 இல் சோவியத் ஒன்றியம் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆப்கான் படையணிகளுக்கு, தாக்குதல்களுக்குத் தயாராகுமாறு உத்தர விட்டது. காபூலுக்கு வெளியே உள்ள தொலை தொடர்பு இணைப்புகள் துண்டிக்கப்பட்டு, காபுல் நகரம் தனிமைப்படுத்தப்பட்டது.

தொடர்ந்துபெரும் அளவிலான சோவியத்வான் படைகள் டிசெம்பர் 25இல் காபுல் நகரில் தரையிறங்கின. முன்னதாகத் தாக்குதல் திட்டங்களைச் செயல்படுத்தும் முன்பு பிரதமர் அமீனை கொலை செய்யும் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அமீன் சோவியத் படைகளின் வருகையை ஒட்டித் தனது இருப்பிடத்தை பிரதமர் இல்லத்திலிருந்து தச்பெக்மாளிகைக்கு மாற்றிக் கொண்டார். அங்கு அவருக்கு ஆதரவான ஒரு ஆப்கானிய படை காவலுக்கு வைக்கப்பட்டது.

கிளர்ச்சிக் குழுக்களின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியதை அடுத்து, ஆப்கானிய அரசு 1978 ஒப்பந்தத்தை முன்னிறுத்தி சோவியத் ஒன்றியத்தின் இராணுவ ஆதரவைக் கோரியது. இக்கோரிக்கைகளை அடுத்து, 1979 யூன் 16இல் தனது முதல் பீரங்கிப்படையைச் சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியது. டிசம்பர் 27, 1979 இல்சோவியத் இராணுவம் அரச மாளிகையை முற்றுகையிட்டு அமீனையும் அவரது காவற்படையினர் 200 பேரையும் சுட்டுக் கொன்று காபூலைத் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதையடுத்து டிசெம்பர் 24 இல் சோவியத் ஒன்றியத்தின் இரு படை பிரிவுகள் காபுல் மற்றும் சிந்தாத் நகரங்களுக்கு வந்திறங்கின. அதே நேரத்தில் உசுபெகிஸ்தான் எல்லை முழுவதிலும் சோவியத் படைகள் குவிக்கப்பட்டன. டிசெம்பர் 27, 1979 இல் சோவியத் இராணுவம் அரச மாளிகையை முற்றுகையிட்டு அமீனையும் அவரது காவற்படையினர் 200 பேரையும் சுட்டுக் கொன்று காபுலைத் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

(தொடரும்...)

## 58 பேர்...

58 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 27 ஆண்களும் 31 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 09 ஆண்களும் ஒரு பெண்ணுமாக 10 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 18 ஆண்களும் 30 பெண்களுமாக 48 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 12,964 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## முதியவருக்கு...

ளது.

அவருடைய பிசிஆர் மாதிரிகள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

அதன்போதே அவருக்கு தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

## கிளிநொச்சியில்...

அவருடைய பிசிஆர் மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

அதன்போதே அவருக்கு தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

## இந்.வெளியுறவு...

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா இன்று சனிக்கிழமை நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகேயின் அழைப்பிற்கமைய அவரின் விஜயம் அமைந்துள்ளது.

இன்றிலிருந்து எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை அவர் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அரச தலைவர்களுடனான முக்கிய சந்திப்பிலும் ஈடுபடவுள்ளார்.

மேலும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ள அவர், இந்திய மத்திய அரசின் உதவியுடன் யாழ்.நகரில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்தையும் பார்வையிடுவார். (ம-3,18)

## தென்மராட்சியில்...

யில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பட்டா வாகனத்தை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,18,30,33,60)

## சாவகச்சேரியில்...

துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி தொடக்கம் கொரோனாத் தொற்று ஏற்பட்டு வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த 84 வயதான மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3,30)

## நாட்டை கட்டுப்...

உள்ளதால் நாட்டை கட்டுப்பாடின்றி திறப்பதன் மூலம் முன்னரை விடவும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்க வழியேற்படலாம் என்று இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

அத்தோடு தடுப்பூசியால் தூண்டப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியானது நோய் தீவிரமடைவதற்கும், மரணம் சம்பவிப்பதற்கும் எதிராக பாதுகாப்பு வழங்குமே தவிர தொற்றுப் பரவலைக் குறைப்பதில் பயனுறுதிமிக்கதாக இருக்காது.

மீண்டும் தொற்றுப் பரவல் ஏற்படுதலானது பெருந்தொற்றின் இன்னொரு அலைக்கு வழிவகுக்குமே தவிர தொற்றுப் பரவலைத் தடுப்பதில் பயனுறுதிமிக்கதாக இருக்காது என்றும் இலங்கை மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## 41 நாட்களின்...

கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

கடந்த 40 நாட்கள் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று அதிகாலை தளர்த்தப்பட்டது.

நேற்றுக் காலை முதலே வீதிகளில் மக்களின் நடமாட்டம் தாராளமாகக் காணப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிஸாரால் பிரதான வீதிகளில் போடப்பட்டிருந்த வீதித் தடைகள் நீக்கப்பட்டிருந்தாலும் குறித்த இடங்களில் இராணுவம் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டனர்.

அத்துடன் பேருந்துகளின் போக்குவரத்து மற்றும் வர்த்தக நிலையங்களும் வழமைக்கு திரும்பியுள்ளது. (ம-3,33)

## அவசரகாலச்...

நெருக்கடியான கட்டங்களிலேயே அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படும்.

ஆனால், ஒடுக்குமுறைக்காகவே இந்த சட்டத்தை தற்போதைய அரசு கொண்டு வந்தது. அது உடன் நீக்கப்பட வேண்டும்" இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திதெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கூறியதாவது,

"அரிசி மற்றும் நெல் வகைகளுக்கு விலையை நிர்ணயித்து 5 வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. அது மட்டுமல்ல தரவுகளைச்சேகரிப்பதற்கு பிரிகேடியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

விலையை நிர்ணயிப்பதற்கு மேஜர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனாலும், உரிய தீர்வு கிட்டவில்லை. மேற்படி அதிகாரங்கள் போதாதென அவசரகாலச் சட்டமும் கொண்டுவரப்பட்டது.

ஆனால், இன்று என்ன நடக்கின்றது? அரிசி வகைகளின் விலையை அரிசி ஆலை உரிமையாளர்கள் நிர்ணயிக்கின்றனர். அரசு வேடிக்கை பார்க்கின்றது. அதாவது நகைச்சுவைத்தனமான அரசாக இது மாறியுள்ளது" எனத் தெரிவித்துள்ளார். (ம-3)

## விடுதலைப் புலி...

யுவதிகளின் கையடக்கத்தொலைபேசியை பொலிஸார் பறித்ததை நியாயப்படுத்தி நேற்று கருத்து வெளியிட்டுள்ள அவர், அங்கு சட்டத்தரணியாக முன்நின்றவரையும் கைது செய்திருக்க வேண்டும் எனவும் கூறினார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனை நினைவுகூரச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட சிலர் அதிரடியாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நினைவேந்தல் நடந்த இடத்திலிருந்த இரண்டு யுவதிகளை விசாரணை செய்த பொலிஸார் அவர்களின் கையடக்கத் தொலைபேசியையும் பறித்துச் சென்றமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இது குறித்து கொழும்பில் நேற்றைய தினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸார் செய்த செயலை நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டார்.

"திலீபன் என்பவரை நினைவுகூரும் நிகழ்வு நடந்தது. இதுபோன்ற கொவிட் நெருக்கடி மத்தியில் வெளியே நடமாடவும் அதேபோல விடுதலைப் புலிகளை நினைவுகூர அனுமதிக்க முடியாது. இது போன்ற நிகழ்வில் கலந்துகொண்டவர்களையே அன்று பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

திலீபன் நிகழ்வில் இரண்டு யுவதிகள் ஊடகப் பெயரைப் பயன்படுத்தி பங்கேற்றிருந்தனர். இறுதியில் ஊடக அடையாள அட்டையை கோரியபோது அவர்களால் அதனை சமர்ப்பிக்க முடியாமற்போனது. உண்மையில் அவர்கள் ஊடகவியலாளர்கள் அல்லர். அதன்பின்னர்தான் அவர்களது கையடக்கத் தொலைபேசியை பொலிஸார் பெற்றனர்.

அதற்கெதிராக அவர்கள் கூச்சல் எழுப்பினார்கள். அவர்களின் செயற்பாடு பொலிஸாரது கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவே இருந்தது. அந்த சம்பவம் பற்றி அறிக்கையை நான் கேட்டுள்ளேன். சட்டத்தை சரிவர நாம் நடைமுறைப்படுத்தவேண்டும். அந்த இடத்தில் ஆங்கிலத்தில் உரத்த குரலாய் ஒருவர் கருத்து வெளியிட்டார். அவரையும் கடமைகளுக்கு இடையூறு செய்த குற்றச்சாட்டில் கைது செய்திருக்க வேண்டும்.

எனினும் குறித்த யுவதிகளை பொலிஸார் இடையூறு செய்யவில்லை. அவர்கள்தான் திலீபனின் நினைவுகூரலில் பங்கேற்றிருந்தனர். நான் யாழ்ப்பாணத்தில் இருந்தவன். அங்கு தமிழீழ விடுதலைப் புலிகள் செய்த விடயங்கள் எனக்குத் தெரியும். மாணவர்களை இழுத்துச் சென்றமை, பிள்ளைகளை இழுத்துச் சென்றமை, வரி செலுத்துவோருக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் என பல விடயங்களை அவதானித்தேன்.

இந்நிலையில் போரில் உறவினர்கள் உயிரிழந்திருந்தால் வீட்டில் வைத்து விளக்கு ஏற்றி அவர்களை அஞ்சலிக்கலாம். ஜேர்மனியில் ஹிட்லரை நினைவுகூர முடியாது. அந்த வகையில் விடுதலைப் புலிகளை நினைவுகூர நாம் இடமளிக்கமாட்டோம்" என்றார். (ம-3)

## ஐரோப்பிய ஒன்றி...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவிற்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை ஆகியவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் ஈடுபாடுகள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லிணக்க நடவடிக்கைகளின் முன்னேற்றம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மீளாய்வு, சிவில் சமூகத்துடனான ஈடுபாடு, நிலையான அபிவிருத்தி இலக்கு 16 முன்முயற்சி மற்றும் மனித உரிமைகள் சபையுடனான இலங்கையின் ஒத்துழைப்பு ஆகியவை குறித்து ஐரோப்பிய தூதுக்குழுவுக்கு வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் உறவுகள் பொருளாதார மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு உட்பட பரந்த அளவிலானதும் மற்றும் பரஸ்பரம் நன்மை பயப்பதுமாகும் என வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டார். ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி இடமாக இருப்பதால் (2020 இல்), ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பி.+ வரிச் சலுகையின் நேர்மறையான பங்களிப்பையும் நாட்டின் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் அதன் நன்மைகளையும் வெளிநாட்டு அமைச்சர் எடுத்துரைத்தார்.

அமைச்சருடனான கலந்துரையாடல்களில், இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான பலதரப்பட்ட ஈடுபாட்டை வரவேற்ற ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு, தொடர்ச்சியான ஒத்துழைப்பை உறுதி செய்தது என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அமைச்சரவை...

அமைச்சரவை மாற்றமாக இது அமையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் வரவு - செலவுத் திட்டத்துக்குப் பின்னரே அமைச்சரவையில் மாற்றம் நிகழ்வது வழக்கம். இருப்பினும், இம்முறை அதற்கு முன்னதாகவே அமைச்சரவை முழுமையாக மாற்றியமைக்கப்பட இருப்பதாக தெரியவருகிறது.

இதற்கு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதற்கு முன்னர் விருப்பம் வெளியிடவில்லை என்றாலும், தற்போது அவர் பூரண விருப்பம் வெளியிட்டிருப்பதாக, அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## சுகாதார வழி...

ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று, கோவிட் ஒழிப்புச் செயலணி வலியுறுத்தியது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதனால், மீண்டும் கோவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தாதிருக்க, சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவது கட்டாயமென்று சுகாதாரத் தரப்பு சுட்டிக்காட்டியது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கோவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே, இந்தவிடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

காணொளி தொழில்நுட்பத்தினூடாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின்போது, அரச மற்றும் தனியார் துறையினரைப் பணிக்கு அழைப்பது மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளின்போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்களை, தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்துக்கமைய பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது.

தொற்றுப் பரவல் நிலைமையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கை முறையைத் தொடர்வதற்காக, சுகாதாரத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளை ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களிடம் தொடர்ந்து கொண்டு செல்லவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ம-3)

# எவ்வித அறிகுறியும் வெளிப்படுத்தாது தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர்

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

எந்தவித அறிகுறியும் வெளிப்படுத்தாது, கோவிட் தொற்றாளர்கள் என்ற அடையாளம் தெரியாத வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர்.

ஆகவே நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் சுகாதார வழிமுறைகளை மீறி செயற்படும் பட்சத்தில் மீண்டும் கோவிட் வைரஸ் தாக்கங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

கோவிட் வைரஸ் தொற்றாளர்களில் 80 வீதமானோருக்கு எந்தவித அறிகுறியும் வெளிப்படுத்தாது என்பதை கவனத்தில் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கோவிட் வைரஸ் தொற்றைப் பொறுத்த வரையில் 80 வீதமானோருக்கு எந்தவித வைரஸ் தொற்றுக்கான அறிகுறியும் வெளிப்படுத்தாது. ஆகவே எந்தவித மருத்துவ சிகிச்சைகளும் பெற்றுக்கொள்ளாது சாதாரணமாக அவர்கள் சமூகத்தில் நடமாடும் நிலையே உள்ளது. எனவே வைரஸை காவிச்செல்லும் வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளது.

கோவிட் 19 வைரஸ் தொற்று பரவலுக்கு மத்தியில் தனிமைப் படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டு மீண்டும் நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் அவதானிக்கப்பட வேண்டிய காரணிகள் குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனைக் கூறினார்.

(ம-03)

# யாழில் 25 பேர் உட்பட வடக்கில் 28 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 25 பேர் உட்பட வடக்கில் மேலும் 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்று 97 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு வட மாகாணத்தில் 28 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த 28 தொற்றாளர்களில் வட மாகாணத்தில் உயிரிழந்த ஐவரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிறந்து 24 நாட்களேயான பெண் குழந்தை உட்பட யாழ். மாவட்டத்தில் உயிரிழந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைகளில் உயிரிழந்த முதியவர்கள் இருவருக்கும் கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. (ம-03)

BOC Travels (Pvt) Ltd
Hospital Road, Jaffna.
BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON
எமது நிறுவனமானது தற்போதைய Covid-19 பரவல் காலத்திலும் விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதுடன் இணைந்ததான இதர சேவைகளையும் வழங்குகின்றது.
021 222 4575/76
070 384 9335, 070 395 1794
(K-2723)

கனடா-STUDENT VISA
A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள்.
IELTS இலவசமாக கற்பிக்கப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

காணி விற்பனைக்கு
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்)
பரப்பு 6 இலட்சம்
பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
(தரகர் தேவையில்லை.)
077 814 7389 | 077 614 7333

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் 20 அடிப் பாதையுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
(யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2Km தூரம்)
076 221 2037, 077 288 0152, 076 734 1023

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
0768226240
DHL

உடனடி வேலை வாய்ப்பு
Full Time or Part Time Vacancies
ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை :- 18 - 28
Earning :- above 18,500/= - 40,000/=
Type of Vacancies
◆Telecaller's ◆Bike Rider's ◆ Supervisors
முன் அனுமதியினைப் பெற.....
உங்கள் Name, NIC No., Place போன்றவற்றை கீழ்க்காணும் WhatsApp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
தொடர்புக்கு : 076 770 7759
WhatsApp : 076 756 5659
No. 100/3, முட்டாசுகடைச் சந்தி, யாழ்ப்பாணம்.

Arpico Insurance PLC
இலங்கையில் 89 வருட காலமாக இயங்கி வரும் Arpico நிதி நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
□ Insurance Consultant
□ Individual Sales
□ Team Managers
நிலையான சம்பளம் தரப்படும். (15,000/- - 75,000/- வரை)
தகுதி - O/L சித்தியடைந்திருக்க வேண்டும்.
குறிப்பு - Part Time, Full Time Work
(உங்கள் மாத வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இதோ!)
மேலதிக விபரங்களுக்கு
Vinson - 077 192 0206
Jaffna Branch
இல-86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

IELTS
DMI COMPUTER EDUCATION
0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
DIPLOMA IN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 4/10/2021
Mon to Fri 8 am
SPOKEN ENGLISH
ZOOM Online
German - Germany Swiss Deutsch
French - France
DMI COMPUTER EDUCATION
0777 24 07 07
021 226 2470 0777577333
021 227 0775 0777227074
021 224 1970 0776033300
021 225 6666 0761354503
021 228 5655 0776398006

TECHNO WORLD
தொழில்நுட்ப கல்லூரி
TECHNO WORLD
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை.
இம்முறை தேசிய, மாவட்டரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் நான்காவது முறையாகவும் முன்னிலையில்
A/L 2023 ஆரம்பம் புதிய பிரிவு - 2 03.10.2021
ஆரம்பம் 8.30 am Zoom Online Class
முற்றிலும் இலவசம்.
A/L 2021, 2022 and Day Class மாணவர்களுக்குரிய Zoom Class நடைபெறுகிறது.
திங்கள் முதல் ஞாயிறு வரை, காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை நேரடியாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
இலவச Zoom Classes
077 017 5346
(C-3736)

மணமகன் தேவை
யாழ்ந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(7367)
☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

நன்றி கூறுகின்றேன்
நேற்றைய வலம்புரி பத்திரிகையில் எனது தங்க நகை ஒன்று தவறிவிட்டது எனும் விளம்பரத்தை பார்த்து யாழ். முடமாவடிச் சந்தியில் இருந்து குறித்த நகையினை எடுத்துத்தந்த நல்உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
(8086) - நிரஞ்சன் -

பணிப்பெண் தேவை
வயோதிப மாதுவை பராமரிப்பதற்கு அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை.
தொடர்பு (C 2722)
076 651 0180

அமெரிக்கா செல்ல
பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?
விளையாட்டு அல்ல இது உண்மை
அமெரிக்க அதிஸ்ட விசா
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
இலவச வாய்ப்பை தவறவிடுவானேன்?
எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது
பதிவுகள் ஆரம்பம்-07-10-2021
உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்
V2 Travels 0768226244
0768226287 / 0768226240

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.